# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் சம்மேளனம் மற்றும் இலங்கைய தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் இடையிலான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து</u>**

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளில் ஆதரவினை வழங்குவதற்கான நோக்குடன் ஒத்துழைப்புக்கான புதிய துறைகளை கண்டறிதல் மற்றும் இருதரப்பு பொருளாதார பங்குடைமையினை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள பல்வேறு அமைப்புகள் இடையிலான கலந்துரையாடல்களை கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஒழுங்கமைத்து வருகின்றது. இதன் அங்கமாக இந்திய ஏற்றுமதியாளர் அமைப்புகளின் சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளன பிரதிநிதிகள் இடையிலான கலந்துரையாடல் ஒன்று 2025 ஜூனில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

2. அதன் அடிப்படையில் 2025 ஆகஸ்ட் 19 ஆம் திகதி இந்திய ஏற்றுமதியாளர் அமைப்புகளின் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று, தகவல்கள் பரிமாற்றம், முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக பங்குதாரர்களை இணைத்தல் ஆகியவை உள்ளிட்ட ஒத்துழைப்புகளுக்கான புதிய வாய்ப்புகளை கண்டறியும் நோக்குடன் கைச்சாத்திடப்பட்டது.

3. மெய்நிகர் மார்க்கம் ஊடாக நடைபெற்ற இப்புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் இந்திய ஏற்றுமதியாளர் அமைப்புகளின் சம்மேளன பணிப்பாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி அஜய் சகாய் தலைமையிலான பிரதிநிதிகள் மற்றும் இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் தலைவர் திரு இந்த்ரா கௌசல் ராஜபக்ஷ அவர்கள் தலைமையிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்த அதேவேளை கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

***********

**கொழும்பு**
**19 ஆகஸ்ட் 2025**